# 19 நாட்டார் தெய்வங்களை வணங்குவோம்

மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை வணங்கி முத்தி அடைவதாகும். முத்தி அடைவதற்குச் சாதனமாக அமைவது இறை வழிபாடாகும். இவ்வழிபாடு என்பது புலன்களை அடக்கி பக்தியுடன் இறைவனை நோக்கி செய்யப்படுவதாகும் புலன்களை அடக்கி வழிபாடு செய்வதென்பது சாதாரண விடயமன்று. அது சாதாரண மனிதனால் செய்யக்கூடியதொன்றன்று. ஆசைகள் அடக்கப்பட வேண்டும். புலன்கள் ஒருமைப்படுத்தப்பட வேண்டும். மனிதன் ஆசை உள்ளவன். ஆதலால் இம்முறைமை மனிதனுக்குக் கடினமானது. யோகிகளுக்கும், ஞானிகளுக்குமே உரியது. இதனால் மனிதன் தம்மால் இயன்ற சாதனங்களைக் கருவியாகக் கொண்டு அதன் வழியாக நின்று இறைவனை அடைய முயல்கின்றான். அச்சாதனங்களுள் ஒன்றாக அமைவது ஆலய வழிபாடாகும்.

ஆலய வழிபாட்டில் முதன்மையாக அமைவது அர்ப்பணம் செய்தல் ஆகும். இதன் இயல்பு பயன் கருதாது செய்யப்படுவதாகும். மனிதன் ஆலய வழிபாட்டைச் செய்யும் போது அவன் தன்னை இச்செயலில் ஈடுபடுத்திக் கொள்ள முயல்கின்றான். அத்தகைய முயற்சியுடனே அவன் வழிபாட்டை மேற்கொள்கின்றான். அர்ப்பணத்தை வளர்த்துக் கொள்ளும் தளமாக ஆலயம் மனிதனுக்கு விளங்குகின்றது என்றால் மிகையன்று. சாதாரண மனிதன் தனது இயல்புகளுக்கேற்ப வழிபாடு இயற்றும் முறைமையே கிரியை அல்லது சடங்கு செய்து வழிபடும் நெறியாகும். இவ்வழிபாடு இரு வகைப்படும். அவையாவன

அ. ஆகம சிற்ப சாத்திர முறைமைகளுக்கமைந்த வழிபாட்டு முறைமை.
ஆ. ஆகம சிற்ப சாத்திர முறைமைகளுக்கு அமையாத வழிபாட்டு முறைமை என்பனவாகும்.

இவற்றுள் முன்னையது ஆகமங்களும், சிற்ப சாத்திரங்களும் கூறுகின்ற விதிமுறைமைகளுக்கு அமைவாக பூசைகளையும், கிரியைகளையும் கொண்டு வழிபாடு செய்யப்படுவதாகும். பின்னையது ஆகம சிற்ப சாத்திர விதிமுறைமைகளுக்கு உட்படாது பொங்கலும் படையலும் இட்டு வழிபடுவதாகும். ஆகம சிற்ப சாத்திர விதிகளுக்கு அமைந்து சிவன், பிள்ளையார், முருகன், அம்மன் முதலான தெய்வங்கள் வழிபாடு செய்யப்படும். ஆகம சிற்ப சாத்திர விதிகளுக்கு அமையாது வழிபடுவது நாட்டார் தெய்வங்களாகும். நாட்டார் தெய்வங்கள் குல தெய்வம், சிறு தெய்வம், ஊர்த் தெய்வம், காவல் தெய்வம், கிராமியத் தெய்வம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுடுகின்றது. இத்தெய்வங்கள் பயம், நம்பிக்கை என்பவற்றை அடிப்படையாக கொண்டு யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம், போன்ற பிரதேச மக்களால் வழிபடப்படுகின்றன. பிரதேச ரீதியாக இச்சடங்கு வேறுபடும். இச்சடங்கை பூசாரிமார், கட்டாடிமார், கப்புகனார், திருநீற்று ஆண்டிகள் போன்றோர் மேற்கொள்வர்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

இவ்வழிபாட்டில் ஆகம சிற்ப சாஸ்திர முறைகளில் இல்லாத பொதுத்தன்மைகள் காணப்படுகின்றன. அவற்றை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- பிறப்பு அற்றவை
- கிராமங்களின் நுழைவாயில், வயல்வெளி, குளக்கரை, ஆற்றங்கரை, மரத்தடி, தெருவோரம், மலைப்புறம் போன்ற இடங்களில் உறைபவை
- குடும்பம், சாதி என்பவற்றுக்குரியவை
- பிராமணரல்லாதோரால் பூசைகள் நிகழ்த்தப்படுபவை
- சூலம், கல், பொல், கும்பம், போன்றவற்றில் உறைபவை
- ஆசாரங்கள் பெரிதும் அற்றவை
- மந்திரங்களால் உச்சாடனம் செய்யப்படுபவை
- நித்திய வழிபாடு அற்றவை
- சடங்குகள் உத்தரவு பெற்றே நிகழ்பவை
- ஒரு பிரகாரத்தை மட்டும் உடையவை.
- பத்ததி நியமங்கள் உடையவை

என்பனவாகும்.

நாட்டார் தெய்வ வழிபாட்டில் இவ்வாறன பொதுத்தன்மைகளுடன் மடைப்பண்டம் எடுத்தல், மடைபரவுதல், தூளிபிடித்தல், பரிகலம் அமைத்தல், கட்டாடுதல் - (இது ஆண்டுப் பொங்கலை நடத்துவோரை வெள்ளைத் துணியால் போர்த்து எடுத்தலைக் குறிக்கும் தூளிபிடித்தல், பரிகலம் அமைத்தலின் பின் இடம்பெறும்). வழி விடுதல், கலை ஆடுதல், கட்டுச்சொல்லுதல், நூல் முடிதல், பேய்க்குப் பார்த்தல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல், தீப்பள்ளம் ஏறுதல், ஆகிய சடங்குகளும் மேற்கொள்ளப்படும். நாட்டார் தெய்வங்கள் வரிசையில் அண்ணமார், இளந்தாரிமார், சுடலைமாடன், காத்தவராயன், வதனமார், குமாரதம்பிரான், மதுரைவீரன், பெரியதம்பிரான் போன்றவற்றின் வழிபாட்டு முறைகளைக் கற்போம்.

## 1. அண்ணமார்

நாட்டார் ஆண் தெய்வங்களுள் அண்ணமாரும் ஒருவர். யாழ்ப்பாணம், வன்னி முதலான பிரதேசங்களில் இவ்வழிபாடு காணப்படுகின்றது. பொல்லுக்கிழவன் சிவகுடும்பன், போன்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டு வழிபடப்படுவர். ஒளி பொருந்தியவர். அலங்காரமான உடையினைத்தரித்தவர், திசைகளெல்லாம் உறைபவர், அழகிய தோற்றம் உடையவர். அறம் பேணுபவர், இசையில் நாட்டம் உடையவர், உலகத்தை தோற்றுவிக்கும் அளவிற்கு உயர்ந்தவர், சொற்களால் வர்ணிக்க முடியாதவர், இவ் வழிபாடு பற்றி முல்லைத்தீவு அண்ணமார் சிந்து, காரை நகர் பிட்டி ஓலை அண்ணமார் கதை, கோணேசர் கல்வெட்டு என வழங்கும் கோணேசர் சாசனப் பாடல், அரியாலை மாதன் சின்னையா ஏடு, புராணக்கதைகள், யாழ்ப்பாண வரலாறு கூறும் மரபு வழி இலக்கியமான வையாபாடல் போன்றவற்றின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

அண்ணமாருக்கான ஆலயங்கள் பரந்துப்பட்ட அளவில் காணப்படுகின்றன. யாழ்ப்பாணம் மயிலணி அண்ணமார், ஆத்திசூடி அண்ணமார் போன்ற ஆலயங்கள் குறிப்பிடத்தக்கன. ஆண்டுப் பொங்கலைச் சிறப்பாக கொண்டது. மடையில் பலவித பலகாரங்கள், பழவகைகள் இடம்பெறும். வளந்துப்பானை வைத்தல், மடைபரவுதல், கலையாடல், கட்டுச் சொல்லுதல், சூனியங்கள் வெட்டுதல் மேற்கொள்ளப்படும். மடைப்பொருட்கள் வாழையிலை, பனையோலை என்பவற்றில் விரித்து படைக்கப்படும். மடை பரவலின் போது பறை முழக்கம் அதிகரிக்கும். இவ்வேளையில் கலை ஆடுதல், கட்டுச் சொல்லுதல், சூனியம் வெட்டுதல், என்பன பூசாரியாரால் நடாத்தப்படும். இவ்வாறான வழிபாட்டு முறைகள் காணப்பட்டாலும் இன்று அண்ணமார், அண்ணமேசுவரர், சிவகுடும்ப அண்ணமார் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டு ஆகம நெறிக்குட்பட்ட தெய்வ வரிசையில் இடம் பிடித்துள்ளன. இவ்வழிபாட்டால் கொடிய நோய் நீங்கும், நெல், பனங்கிழங்கு, மரவள்ளி போன்றவை அதிக விளைச்சலைத் தரும்.



## 2. இளந்தாரிமார்

இளந்தாரிமார் வழிபாடு யாழ்ப்பாணம், வன்னி போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்றது. இளமைத்தோற்றம் கொண்டவர், சிறிய கட்டிடத்தின் சூலத்தில் உறைபவர், நினைத்த காரியம் கைக்கூடச் செய்பவர், நாவூறு போன்றவற்றை நீக்குபவர். இவ்வியல்புகளைக் கொண்ட இளந்தாரி கோயில் ஒன்று வன்னியின் மல்லாவியில் உள்ளது. யாழ்ப்பாணம் இணுவிலில் உள்ள இளந்தாரிமார் கோவில் பற்றி இணுவில் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்ட ‘‘இளந்தாரி துரைமீது பஞ்ச வண்ணத்தூது’’ என்ற பெயரில் பாடப்பட்ட ஏட்டின் மூலம் அறிய முடியும். இந்த ஏட்டில் மூவர் குறிப்பிட்டப்பட்டுள்ளனர். மூவரில் இருவர் தகப்பனாரால் விரட்டப்பட்டனர். அவர்கள் புளிய மரத்தில் ஏறினார். இவர்களைப் பின்பற்றி மூன்றாமவர் பனை மரத்தில் ஏறினர் இறுதியில் மூவரும் மேலே சென்று மறைந்தனர். இதனால் இவர்கள் இளந்தாரிமார் எனப்பட்டு புளியமரத்தை மூலமாகக் கொண்டு ஆலயத்தருகில் குறித்த பனையைச் சூழ ஆலமரம் ஒன்றும் உள்ளது. இன்றும் இவ்விரு இடங்களிலும் சடங்கை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வழிபாட்டால் நெல், தோட்டப் பயிர்கள் அதிக விளைச்சலைக் கொடுக்கும். கெட்ட தேவதைகள் அணுகாது.

## 3. சுடலைமாடன்

நாட்டார் தெய்வங்களுள் சுடலை மாடனும் ஒருவன். சுடலையில் சிறிய கட்டடத்தில் உறைபவன். துட்ட தேவதைக்குள் அடக்கப்படுபவன். மக்களுக்குப் பல துன்பங்களைச் செய்பவன். இருளன், மருளன், பிணந்தின்னி, ஊத்தைக்குடியன் போன்றவற்றுடன் சேர்ந்து உறைபவன். பயங்கரக் கண்களைக் கொண்டவன். இவ்வாறானவன் யாழ்ப்பாணம், திருகோணமலை, வன்னி போன்ற இடங்களில் காணப்படுகின்றான். சுடலை மாடனால் பீடிக்கப்பட்ட ஒருவரை சடங்கின் மூலம் குணப்படுத்த முடியும். புதிதாக புதைக்கப்பட்ட சவக்குழியின் மேல் இச்சடங்கு நடைபெறும். சவக்குழியின் தலைமாட்டில் தென்னம்பாளையொன்று நிறுத்தி வைக்கப்படும். மார்புப் பகுதியின் மேல் மடை பரப்பப்படும். மடையில் வாழைப்பழம், பலகாரங்கள், தேங்காய் என்பன வைக்கப்பட்டிருக்கும். தொப்புள் மேல் நோயாளி நிறுத்தி வைக்கப்படுவார். தென்னம் பாளையைப் பார்த்த வண்ணம் நோயாளி காணப்பட்டாலும் பின்புறமாக திருப்பப்படுவார். திருபப்பட்ட நோயாளியின் வீட்டை நோக்கி பல இடங்களில் தேசிக்காய் வெட்டி கழித்துக் கொண்டே வரப்படுவார். இவ்வாறான இவ்வழிபாடு பெரும்பாலும் வழக்கொழிந்து வருகின்றது.

## 4. காத்தவராயன்

நாட்டார் தெய்வங்களுள் இவனும் ஒருவன். காத்தான், காத்தலிங்கசாமி, காத்தமுத்து போன்ற பெயர்களால் அழைக்கப்படுபவன். மாரியின் வளர்ப்பு மகன் என்றும் அழைக்கப்படுபவன். ஆரியமாலை என்ற பெண்ணைக் களவு மணம் செய்தவன். தொட்டியத்துச் சின்னான் என்பவனை நண்பனாகக் கொண்டவன். சிறு மீசை கொண்டவன். இளவரசர் தோற்றத்தை உடையவன். அழகு பொருந்தியவன். வேட்டையாடுதல், சொக்கட்டான், ஆடுதல் போன்றவற்றைப் பொழுது போக்காகக் கொண்டவன். பல உணவுகளையும் விருப்பமுடன் உண்பவன். இவ்வாறான இயல்புகளைக் கொண்டவனுக்கான ஆலயங்கள் பல ஆங்காங்கே உள்ளன. யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் இவனுக்கான ஆலயங்கள் காணப்படுகின்றன. காத்தவராயன் வழிபாட்டில் ஆண்டுப் பொங்கல் முக்கியமானது. மடையில் பல பொருட்கள் படைக்கப்படும். ஆண்டுப் பொங்கலன்று அவன் கதை கூத்தாக ஆடப்படும். சடங்கை அடிப்படையாக கொண்டு வழிபடப்படும் ஆலயங்களுள் வன்னியில் உள்ள வன்னி விளாங்குளம் முத்துமாரி அம்மனுக்கு அருகில் உள்ள காத்தவராயன் ஆலயம் குறிப்பிடத்தக்கது. வைகாசி விசாகத்தன்று ஆண்டுப் பொங்கல் அங்கு இடம்பெறும். கலை ஆடுதல், கட்டுச்சொல்லுதல், நூல் முடிதல் போன்றவை பூசாரியாரால் மேற்கொள்ளப்படும். இவ்வழிபாட்டால் வேளாண்மை, சிறுபயிர்கள் அதிக விளைச்சளைக் கொடுக்கும். அம்மை, வாந்திபேதி, கண் வருத்தம் போன்ற கொடிய நோய்கள் நீங்கும்.





இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 5. வதனமார்

நாட்டார் தெய்வங்களுள் இவரும் ஒருவர். கூட்டத்தினர் என்ற பெயரையும் கொண்டவர்கள். ஓரிடத்திலும் தங்காமல் அலைந்து திரியும்முல்லை நிலத்திற்கு உரியவர்கள். கச்சை, சட்டை, தலைப்பாகை முதலிய ஆடைகளை அணிந்திருப்ப வர்கள். வில், அம்பு, கண்டக்கோடாரி, பொல்லு, மத்து போன்றவற்றை ஆயுதமாக கொண்டவர்கள். வதனமாருள் மூத்தவர் தலைவர் அல்லது மங்கலானார் அல்லது நயினார் போன்ற பெயர்களால் அழைக்கபடுபவர்கள், கொம்பன் யானை, குழுமாடு போன்றவற்றைப் பிடிப்பவர்கள் வன்னியர்கள் என்ற சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்படுபவர். நிரந்தர கோயில்களோ நிரந்தர வழிபாட்டிடங்களோ இல்லாதவர்கள். இச்சிறப்புகளைக் கொண்ட இவ்வதனமார் வழிபாடு மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்றது. இவ்வழிபாடு மூன்று வகைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. வெளிமடை பத்ததிமுறை, துளிப்படைபத்ததி முறை, வில்லைக்கட்டுப்பத்ததி முறை, என்பன அவையாகும். முன்கூறப்பட்ட இருமுறைகளும் சாதாரண மாட்டுப்பட்டிகளில் செய்யப்படுபவையாகும். வில்லை கட்டுச்சடங்கு பரந்த அடிப்படையில் யாவரும் சேர்ந்து செய்வதாகும். இவ்வழிபாட்டால் குழுமாடு பிடித்தல், பால்முட்டி காவுதல், பால் வார்த்தல், தேன் வெட்டுதல் போன்ற நன்மைகள் ஏற்படும்.

## 6. குமாரதம்பிரான்

நாட்டார் தெய்வங்களுள் இவனும் ஒருவன். இவன் குமாரத்தன், குமார தெய்வம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுவான். மட்டக்களப்பு பண்டைய மக்களாலும், வேடர்க்குலத்தவர்களாலும் வழிபடப்பட்டவன். கையில் கோடாரி, பொல்லு, போன்றவற்றை வைத்திருப்பான். ஆசையை விரும்புவோன் என நூல்கள் கூறும். இந்த வழிபாடு இன்று அருகிவிட்டது. இவ்வழிபாட்டுச் சடங்கு நடைபெறும் இடத்தில் முக்கோணமாக பந்தலமைப்பர். இப்பந்தலின் மேற்பக்கம் வெளியாக விடப்படும். மூன்று பக்கங்களும் இயற்கைப் பொருட்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். பந்தலின் நிலத்தில் வெள்ளைச் சேலை விரித்து அதில் மடை வைக்கப்படும். மடையில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், என்பன வைக்கப்படும். சடங்கை மேற்கொள்பவர் கலை ஆடுவார். காலில் சலங்கை கட்டி தலையில் தொப்பி போன்ற ஒன்றை அணிந்து கோடரி, பொல்லு ஏதாவதொன்றை வைத்தே கலை ஆடுவார். இவ்வேளை கட்டுச்சொல்லல் இடம்பெறும். ஆண்டுக்கொரு தடவை இச்சடங்கு செய்யப்பட வேண்டும். இல்லையேல் வெப்பு, இரத்த சோகை, காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்படும். அத்துடன் வயல் விளையாது. நிம்மதி இருக்காது என இத்தெய்வத்தை வழிபடுபவர்கள் நம்புவர்.

## 7. மதுரைவீரன்



மலையக நாட்டார் தெய்வங்களுள் ஒருவன். தமிழ்நாட்டைச் சேர்ந்தவன். பொம்மான் என்ற பாளையக்காரரிடம் வேலை செய்தவன். பொம்மி என்பவளைத் திருமணம் செய்தவன். சிறந்த வீரன். பல வகைகளிலும் ஆற்றல் பொருந்தியவன். பல்லாண்டு காலம் மலையக மக்களால் வழிபடப்படுபவன். மலையக இல்லங்களிலும் மரநிழல்களிலும் பெரிதும் வழிபடப்படுபவன். சடங்கை அடிப்படையாக கொண்டு இவன் வழிபடப்படுபவன். ஆதலால் பூசாரி மூலம் வழிபடப்படுகின்றான். பொங்கல் வைத்து வழிபடப்படுகின்றான். பொங்கல் வேளையில் பறை உடுக்கு, தப்பு, சங்கு, போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படும். இவ்வேளையில் பூசாரி கலை ஆடுவார். கெட்ட பிசாசுகள் அணுகாமை, நோய்கள், வெள்ளம், வரட்சி, களவு ஏற்படாமை, நினைத்த காரியம் நிறைவேறுதல், என்பன இவனை வழிபடுதல் மூலம் ஏற்படும். அத்துடன் உழைப்பு, பொருளாதாரச் சிக்கல், ஏக்கம், சாதி அமைப்பு, கங்காணி தலைமைத்துவம், போன்ற இன்னோரன்ன காரணங்களால் மலையக மக்கள் அனைவராலும் இவன் வழிபடப்படுகின்றான்.

## 8. பெரியதம்பிரான்

நாட்டார் தெய்வங்களுள் பெரிய தம்பிரான் குறிப்பிடத்தக்கவன். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி, போன்ற பிரதேச மக்களால் வழிபடப்படுபவன். தக்கனின் யாகத்தை அழிக்கும் பொருட்டு, சிவனை நோக்கி செய்த யாகத்தில் பிறந்தவனே இவனாவான். இவ்வகையில் சிவனின் அம்சங்களில் ஒருவனாகவே இத்தெய்வம் கருதி வழிபடப்படுகின்றது. அழகு பொருந்தியவன், வெள்ளைத்தாமரையில் வீற்றிருப்பவன், வெற்றிக் கொடியை கையில் கொண்டவன், தாளமும் இசையும் போலவும், சொல்லும் பொருளும் போலவும் எங்கும் நிறைந்திருப்பவன். பிழைகளைப் பொறுப்பவர், ஆக்குபவரும் அழிப்பவரும் அவரே என நூல்கள் புகழ்ந்து பேசும். இத்தகைய ஆற்றலுடைய பெரியதம்பிரானுக்கு பல ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஏழாலை பெரியதம்பிரான் ஆலயம் குறிப்பிடத்தக்கது. இவ்வாலயப் பூசகர் படிமத்தான் எனப்படுவார். ஆண்டுக்கொருமுறை விழா இடம்பெறும்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

இதனைப் பெரிய தம்பிரான் பொங்கல் என அழைப்பர். இவ்விழா பரிகலம் அழைத்தல், கொடியேற்றம், இராசநேவை (வாழ்த்துப் பா) கதாகரித்தல், கழுத்தில் போட்டிருக்கும் சேலையை விரித்து ஆடுதல், பொங்கல், மடை, பரவல், கண்ணூறு கழித்தல், தீப்பாய்தல், வழிவிடல் முதலான சடங்குகள் நடைபெறும்.

இவ்வாலயத்தில் பரிகலத் தெய்வங்களாக நாகதம்பிரான், நாககன்னி, நாச்சிமார், நீலசோதையன் என்பன காணப்படுகின்றன. இவ்வாலய வழிபாட்டில் மடைப்பொருட்கள் பழங்கள், பட்டு, சிலம்பு, பிரம்பு, இரும்பு உலக்கை, கண்ணாடி, மஞ்சள், எண்ணெய், சாதிக்காய், தொட்டில் என்பன வைக்கப்படும். பெரியதம்பிரான் வழிபாட்டால் பட்டிகள் பெருகும், பாற்சோறு பொங்கும், புத்திரபேறு கிட்டும் சகல சம்பத்தும் உண்டாகும்.

## 🕮 பாடச்சுருக்கம்

- நாட்டார் வழிபாடு பல பெயர்களால் அழைக்கப்படும்
- யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம் போன்ற பிரதேசங்களில் நாட்டார் வழிபாடு காணப்படுகின்றது.
- அண்ணமார், இளந்தாரிமார், சுடலைமாடன், வதனமார், பெரியதம்பிரான், மதுரைவீரன், காத்தவராயன், குமாரதம்பிரான், போன்ற நாட்டார் தெய்வங்கள் பரந்துபட்டளவில் வழிபடப்படுகின்றன.
- நாட்டார் தெய்வங்கள் சடங்கை அடிப்படையாக கொண்டு பிரதேச ஆற்றுப்படுத்துவோர்களினால் வழிபடப்படுகின்றன.
- நாட்டார் தெய்வ வழிபாட்டால் வேளாண்மை பெருகும், கொடிய நோய்கள் நீங்கும். மற்றும் அனைத்து நன்மைகளும் ஏற்படும்.

## ✍ பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. எமது வழிபாட்டு முறைகள் இரண்டும் யாவை?
2. நாட்டார் வழிபாடு வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது?
3. நாட்டார் வழிபாட்டில் சடங்கு என்றால் என்ன?
4. வதனமார் எப்பெயரால் அழைக்கப்படுகின்றனர்?
5. பெரியதம்பிரான் வழிபாடு சிறப்பாக நடைபெறும் ஆலயம் ஒன்று தருக

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

1. அண்ணமார் வழிபாடு காணப்படும் ஆலயங்களுள் ஒன்று
   (i) வதிரி (ii) அல்வாய் (iii) மயிலணி (iv) கொக்கிளாய்

2. வதனமாரின் மூத்தவன் (தலைவன்) எவ்வாறு அழைக்கப்படுகின்றான்.
   (i) பொல்லுக் கிழவன் (ii) நயினார் (iii) வல்லிக்கண்ணன் (iv) இடும்பன்

3. காத்தவராயன் பெயர்களுள் ஒன்று
   (i) காத்தான் (ii) சடையன் (iii) விறுமர் (iv) பிறத்தி சங்கிலி

4. குமாரதம்பிரான் ஆலயம் காணப்படும் பிரதேசங்களில் ஒன்று
   (i) மட்டக்களப்பு (ii) திருகோணமலை (iii) யாழ்ப்பாணம் (iv) வன்னி

5. நாட்டார் வழிபாட்டில் முக்கிய இடம்பெறுவது
   (i) கிரியை (ii) வேள்வி (iii) சடங்கு (iv) ஓதுதல்

## ௐ செயற்பாடு

♦ உமது பிரதேசத்திலுள்ள நாட்டார் ஆலயம் ஒன்றுக்குச் சென்று அங்குள்ள வழிபாட்டு முறைகளைப் பார்வையிட்டு அதனை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

♦ ‘‘நாட்டார் ஆண் தெய்வங்கள் ” என்ற தலைப்பில் ஐந்து நிமிடமளவில் வகுப்பறையில் பேச்சொன்றை நிகழ்த்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக